**வெளியீடு எண்: 213** **நாள்: 06.03.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 5.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், மதுரை மாவட்டம், வடபழஞ்சி கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (எல்கோசெஸ்) 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

இப்புதிய தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடமானது தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 71,482 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடம் தீயணைப்பு வசதி, குளிர்சாதன வசதி, மின் தூக்கிகள், ஜெனரேட்டர், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு தொழில்முனைவோர்கள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த வணிகத்தை சென்னையில் தொடங்க ஏதுவாக, சென்னை, சோழிங்கநல்லூரில் உள்ள எல்கோசெஸ்ஸில் தகவல் தொழில்நுட்ப கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 23.9.2016 அன்று அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, சோழிங்கநல்லூரில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், 83 கோடியே 73 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஏ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 06.03.2019